Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் –IV

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆடி–01 | 16–07–2004 | வெள்ளிக்கிழமை | ஓசை –100




# மட்டு. சிறையில் கருணாவின் சகா

# கைதி ஒருவரினால் சுட்டுக் கொலை

## மற்றொருவரும் மரணம், ஒருவர் காயம்

(மட்டக்களப்பு)

**மட்டக்களப்புச் . சிறைச்சாலையில் நேற்றுக் காலை இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் கருணாவின் நெருங்கிய சகா ஒருவர் உட்பட இருவர் கொல்லப்பட்டதோடு ஒருவர் காயங்களுக்கு உள்ளானார். சிறைச்சாலையில் இருந்த கைதி ஒருவரே இத்தாக்குதலை நடத்தியுள்ளார்.**

சுட்டுக் கொல்லப்பட்டவரில் கருணாவின் நெருங்கிய சகாவான சச்சி மாஸ்ரர் முக்கியமானவராகும். கருணாவினால் அம்பாறை மாவட்டத் தளபதியாக நியமிக்கப்பட்டவராவார். இவர் புலிகளின் கஞ்சிக்குடியாறு முகாமிற்கு பொருட்கள் விநியோகம் செய்தபோது நிதி மோசடியில் ஈடுபட்டமைக்காக புலிகள் அமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்டவராவார். இருப்பினும் கருணாவின் காலத்தில் மட்டு மாவட்டத்தில் நடந்த தேசவிரோத நடவடிக்கைகளுக்கும் சச்சி மாஸ்ரருக்கும் நெருங்கிய தொடர்புண்டு. சிறைச்சாலையில் இருந்து கொண்டு சிலரைத் தூண்டி தேசவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தவராவார்.

கருணாவின் நெருங்கிய சகாவான சச்சி மாஸ்ரர் , மாறன் என்ற பெயரில் சிறைச்சாலையில் இருந்து கொண்டே பல குழப்பங்களை விழைவித்து வந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இத்துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் சச்சி மாஸ்ரர் என அழைக்கப்படும் கணபதிப்பிள்ளை மகேந்திரன என்பவரும் தீபன் எனப்படும் சரவணமுத்து சாந்தகுமார் என்பவரும் கொல்லப்பட்டனர். இவர்கள் இருவரும் ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் இருந்தவர்கள் ஆவர். காயமடைந்த தியாகராசா முரளிதரன் என்பவர் மட்டக்களப்புப்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். சிறைச்சாலையில் அத்தியட்சகர் — காவலர் மோதல்

### இருவரும் வைத்தியசாலையில் அனுமதி

யாழ். சிறைச்சாலையில் கடமையாற்றிவரும் சிறைக்காவலர் ஒருவருக்கும் சிறைச்சாலை அத்தியட்சகருக்குமிடையே சிறைச்சாலை வளாகத்துள் பெரும் கைகலப்பு ஒன்று ஏற்பட்டுள்ளது. நேற்று இடம் பெற்ற இச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

மேற்படி சிறைச்சாலையிலிருந்து கைதிகளை விசாரணைகளுக்கென யாழ்.நீதிமன்றிற்கு தான் அழைத்து சென்றிருக்காமை தொடர்பாக விசாரிக்கவெனக்கூறி தனது வதிவிடத்திற்கு அழைத்த சிறைச்சாலை பிரதி அத்தியட்சகரே தன்னைக் கதிரையால் தாக்கியதாகவும், தனது வளர்ப்பு நாயை தன்மீது ஏவி விட்டதாகவும் காயமடைந்த சிறைச்சாலை காவலரான சுப்பரமணியம் பாலேந்திரா மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலக இணைப்பதிகாரிக்கு வழங்கிய வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளார்.கையொன்று முறிந்த நிலையில் இவர் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ள அதே விடுதியில், கழுத்துப் பகுதியில் காயமுற்ற நிலையில் சிறைச்சாலை அத்தியட்சகரும் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதே வேளை சம்பவத்தில் பாதிக்கப்பட்ட

(IV ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிச் சூடு நடத்திய கைதி ச.செ.சங்க குழுவினர் முன் சரண்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சிறைச்சாலையில் துப்பாக்கிச் சூடு நடத்தியவர் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதிகள் முன்னிலையில் சிறிலங்காப் பொலிசாரிடம் சரணடைந்துள்ளார்.

மகேந்திரன் புவிதரன் என்பவரே சரணடைந்தவராவார். துப்பாக்கிச்சூட்டை நடத்திய கையோடு சிறைச்சாலையின் கூரைமேல் ஏறி தன்னைக் கைது செய்ய முயன்றால் தற்கொலை செய்யப்போவதாகவும், என்னிடம் வெடிகுண்டு இருக்கிறது, துப்பாக்கிப்பிரயோகம் செய்வேன் எனவும் கூச்சலிட்டார். அத்துடன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் முன் வாக்குமூலங்கள் தர வேண்டுமென நிபந்தனையும் விதித்தார். இதனையடுத்து சம்பவ இடத்திற்கு சர்வதேச செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதிகளும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் அழைக்கப்பட்டனர். அதற்குப் பின்னர் மட்டக்களப்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மகேஸ் சமரதிலக கைதியுடன் சமரசப் பேச்சில் ஈடுபட்டார். சுமார் நான்கு மணி நேரத்தின் பின் குறிப்பிட்ட கைதி கூரையிலிருந்து கீழே இறங்கி பொலிசாரிடம்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு.சிறைச்சாலை சம்பவத்தை அரசியல் பிரச்சினையாக பார்க்க முடியாது

### சிறைச்சாலை ஆணையாளர்

(கொழும்பு)

மட்டக்களப்பு சிறைச்சாலையில் நேற்று இடம் பெற்ற சம்பவத்தை நாம் ஒரு அரசியல் பிரச்சினை என தீர்க்க இயலாதென சிறைச்சாலை ஆணையாளர் றூமி மசூட் தெரிவித்துள்ளார்.தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

ஆயுதங்கள் எவ்வாறு சிறைச்சாலைக்குள் கொண்டு செல்லப்பட்டது என்பது தொடர்பாக விசாரணை செய்து வருகிறோம். அத்துடன் சிறைச்சாலையில் வேறுபட்ட குழுக்களைச் சேர்ந்தவர்களைத் தனித்தனியாக வைத்துள்ளோம். ஆயினும் அதிகாலை இவர்களை உடற்பயிற்சிக்காகத் திறந்து விடுகின்ற வேளை ஒன்று சேர்வார்கள். இச் சந்தர்ப்பத்தில் தான் சுட்டவர் ஆயுதத்துடன் உள்ளே சென்றிருக்கலாம் எனத் தெரிவித்தார். மேலும் சிறைச்சாலைக்கு தற்போது பொலிஸ் பாதுகாப்பு கொடுத்துள்ளோம்.

(IV ஆம்பக்கம் பார்க்க)

## பெற்றோரிடம் ஒப்படைப்பு

கடந்த 04.07.2004 அன்று கல்வி நிலையத்திற்குச் சென்ற வேளை காணாமற் போனார் என மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த விநாயகமூர்த்தி விசாசன் என்ற வட்டுக்கோட்டையைச் சேர்ந்த 09. வயதுடைய சிறுவன் யாழ் நகரப் பகுதியில் நின்றபோது அரசியல் துறையினரால் மீட்கப்பட்டு பெறறோரிடம் ஒப்படைக்கப்பட்டார். (36)

## சுருட்டிய பணத்தில் துரோகி கருணா மனைவியின் பெயரில் கொழும்பில் முதலீடு

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணா விடுதலைப்புலிகள் அமைப்பில் செயற்பட்ட காலத்தில் கோடிக்கணக்கில் பணத்தை சூறையாடித் தனது மனைவியின் பெயரில் தனியார் வங்கியில் வைப்பிலிட்டிருப்பதுடன் ஏற்றுமதி இறக்குமதி நிறுவனங்களையும் நடத்தி வருவது அம்பலப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான விடயங்களைக் கொழும்பிலிருந்து வெளிவரும் டெய்லிமிரர் ஆங்கிலப் பத்திரிகை வெளியிட்டுள்ளது. தராகியினால் எழுதப்பட்டுள்ள செய்திக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- தமிழீழ விடுதலைப்புலிகளால் கடந்த மார்ச் மாதம் வெளியேற்றப்பட்ட பின்பு மகாஜல எனும் பெயரில் ஏற்றுமதி இறக்குமதி தனியார் நிறுவனம் ஒன்றைக் கருணா பதிவு செய்துள்ளார்.

நிறுவனத்தின் தலைவராக கருணாவின் மனைவி நிரா என்றழைக்கப்படும் திருமதி வித்தியாபதியும்,

(IV ஆம்பக்கம் பார்க்க)

## மாநாடு கொழும்பில்

(கொழும்பு)

சர்வதேச துறைமுக மற்றும் கப்பல் போக்குவரத்து தொடர்பான மாநாடு ஒன்று முதல் தடவையாக இலங்கையில் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரை கொழும்பில் இந்த மாநாடு நடைபெறவுள்ளது .சர்வதேச கடல் பாதுகாப்பு சம்மேளனம், இலங்கை துறைமுக அதிகார சபை மற்றும் இலங்கைக் கடற்படை என்பன

(IV ஆம்பக்கம் பார்க்க)

## யாழ்.இல் நான்கு மீனவர் வெடிமருந்துடன் கைது

(யாழ்ப்பாணம்)

குடாக் கடலினூடாக யாழ் நகரப் பகுதிக்கு வெடிபொருட்களை எடுத்து வர முற்பட்டதாகக் கூறப்படும் நான்கு மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.குருநகர் பகுதியைச் சேர்ந்த இம்மீனவர்கள் நால்வரும் நேற்று அதிகாலை வேளை கடலிலிருந்து குருநகர் சீநோர் இறங்கு துறையூடாக கரை திரும்பியவேளை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இராணுவத்தினரால் அவர்களது மீன்பிடிப்படகு சோதனையிடப்பட்ட வேளை 250 கிராம்கள் நிறையுடையதாகப் பொதிசெய்யப்பட்டிருந்த 4பைக்கற் ரி.என்.ரி.வெடிமருந்து மற்றும் 4டிக்னேற்றர்களே கைப்பற்றப்பட்டுள்ளன.இதேவேளை கைதுசெய்யப்பட்ட இந்நான்கு மீனவர்களும் இன்று யாழ்.நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர். இவர்களைப் பிணையில் விடுவிக்க்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சை முன்னெடுக்க சர்வ கட்சி ஆலோசனைச்சபை

### ஐ.ம.சு.முன்னணித் தலைவர்கள் தீர்மானம்

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தைகளை வெளிப்படையான முறையில் முன்னெடுத்துச் செல்லும் நோக்கில் சர்வ கட்சி ஆலோசனைச் சபை ஒன்றை உருவாக்கவேண்டுமென ஐ.ம.சு.முன்னணியின் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை சனாதிபதியைச் சந்தித்த வேளை இத்தீர்மானம் எடுக்கப்பட்டதென சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

இதில் ஐ.தே கட்சி உட்பட பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தும் சகல அரசியல் கட்சிகளும் அடங்குகின்றன. எனவும், இதற்கு ஆளும் கட்சியின் சகல உறுப்பினர்களும் இணங்கியுள்ளனரெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்னதாக

(IV ஆம்பக்கம் பார்க்க)

# வரிவிளம்பரம்

### கருத்தரங்கு

ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சைக்கான இறுதிச் செயலமர்வு 17.07.2004 (சனி-காலை 8.30 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை)அன்று கிளிநொச்சி டிப்போ வீதியில் அமைந்துள்ள கேம்பிறிஜ் கல்லூரியில் நடைபெறும் கட்டணம் 150/= (4636)

### விவசாயிகளே!

உங்கள் வீட்டுத்தோட்டத்தை வளமாக்கத் தேவையான தென்னை, மாதுளை, பலா, மா, எலுமிச்சை (தேசி), தோடை, கயூ, கமுகு, கொய்யா, கொடித்தோடை, நெல்லி, சவுக்கு, சமண்டலை, தவசி, அகத்தி, கறிவேப்பிலை, தூதுவளை, பப்பாசி (றெட்லேடி) போன்ற பலதரமான நல்லின நாற்றுக்களை நீங்கள் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள், ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணை, வட்டக்கச்சி. (சி.9895)

### தவறிவிட்டது

மீசாலை வடக்கு முத்துத்தம்பி-வீரசிங்கம் ஆகிய எனது அடையாளஅட்டை, இ.போ.ச.அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், இராணுவ அறிமுக அட்டை கிளிநொச்சி கந்தசாமி கோவிலடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனை, கிளிநொச்சி அல்லது 84 கனகாம்பிகைக்குளம் விலாசத்தில் கொடுத்துதவவும். (4821)

### பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்

கிளி.முருகானந்த மகாவித்தியாலயம் காலம்:- 17.07.2004 (சனிக்கிழமை), நேரம்:-பி.பகல் 3.30 மணி, இடம்:- பாடசாலை மண்டபம். அனைத்துப் பழைய மாணவர்களையும் அன்புடன் அழைக்கின்றேன். அதிபர், கிளி. முருகானந்த ம.வி. முரசுமோட்டை. (4824)



மூங்கிலாறு வசீகரன் சிறுவர் கல்வி,போசாக்கு மேம்பாட்டுப் பூங்காவின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது இதில் இடம்பெற்ற இசைவும் அசைவும் நிகழ்வில் சிறார்கள் தோன்றும் காட்சி. (19)

# எந்த இடர்கள் வரினும் அவற்றை முறியடித்து தமிழருக்கு விடிவைப் பெற்றுத்தர புலிகள் உழைப்பர்

## -யாழ்.மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் இளம்பரிதி

(யாழ்ப்பாணம்)

எத்தனை தடைகள், இடர்கள் வந்தாலும் அவற்றை முறியடித்து தமிழ் மக்களுக்கு வெற்றியையும் விடிவையும் பெற்றுத்தர விடுதலைப் புலிகள் தொடர்ந்து உழைப்பர் என விடுதலைப்புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்துள்ளார்.

யாழ். மயிலிட்டி கடற்றொழிலாளர் சங்கத்தினரால், மயிலிட்டி பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்து வாழும் சிறார்களின் நலன்கருதி, பருத்தித்துறை அம்மன் கோவிலடியில் முன்பள்ளி ஒன்று நேற்று திறந்துவைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சமாதான முயற்சிகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு மக்களுக்கு விடிவு கிட்டவேண்டும் என்பதற்காகப் புலிகள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றபோதும் பேரினவாத அரசாங்கம் சமாதான முன்னெடுப்புக்களை இழுத்தடிப்புச் செய்து போரிற்கான ஆயத்தங்களைச் செய்துவருவதுடன் சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டையாகவும் இருந்து வருகிறது.

எனினும் எத்தனை தடைகள் இடர்கள் வந்தாலும் அவற்றை முறியடித்து தமிழ் மக்களுக்கு வெற்றியையும், விடிவையும் பெற்றுத்தரப் புலிகள் தொடர்ந்தும் உழைப்பர் எனவும் தெரிவித்தார்.

மயிலிட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் தலைமையில் இடம்பெற்ற இம்முன்பள்ளித் திறப்பு விழாவில் பொதுச்சுடரினை யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் தவரட்ணம் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக்கொடியினை வடமராட்சி கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் அன்பழகன் ஏற்றிவைத்தார். இதனைத் தொடர்ந்து யாழ்.மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் சி.இளம்பரிதியினால் முன்பள்ளி, நாடாவெட்டித் திறந்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் போராளிகள், பொதுமக்கள், பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டனர். (33)

# முள்ளியவளை வைத்தியசாலையின் புனரமைப்பிற்கு நிதி ஒதுக்கீடு

(முள்ளியவளை)

முள்ளியவளை அரசினர் வைத்தியசாலையின் சிறு புனரமைப்புக் காக ஜப்பான் வங்கியின் சர்வதேச ஒத்துழைப்பு ஜெபிக் நிறுவனத்தினால் முல்லைத்தீவு மாகண சுகாதார சேவைப்பிரதிப் பணிப்பாளரின் ஒழுங்குபடுத்தலில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி நிதியினை சரியான முறையில் பயன்படுத்தி எதிர்வரும் மாதமுடிவிற்குள் மேற்படி வைத்தியசாலையின் பழுதடைந்த நிலையிலுள்ள கூரை புனரமைப்பு வேலைகள் செய்யப்பட்டு முடிக்கப்படவேண்டும் எனவும் வைத்திய சாலையில் மழைநீரில் நனைந்து பாசி பிடித்துள்ள சுவர்களுக்கு வர்ணம் பூசப்படல் வேண்டும் எனவும் வைத்திய அதிகாரியிடமும் வைத்தியசாலையின் நலன்புரிச் சங்கத்திடமும் கேட்கப்பட்டுள்ளது. (ஆ)

# யாழ்.பொ.அ. ஒன்றியத்தின் நடுவப்பணியகம் திறப்பு

யாழ்.மாவட்ட பொது அமைப்புகள் ஒன்றியத்தினரின் நடுவப் பணியகம் காங்கேசன் துறைவீதியில் உள்ள மனோகரா திரையரங்கச் சந்தியில் நேற்று வைபவரீதியாகத் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட பொது அமைப்புக்கள் ஒன்றியப் பொதுச் செயலாளர் ப.கனகலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாவீரர் றஞ்சனின் தந்தை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் மா.கா.ஈழவேந்தன், பொது அமைப்புக்கள் ஒன்றியத் தலைவர் சூ.சிறில் ஆகியோர் பொதுச்சுடரினை ஏற்றி நிகழ்வினை ஆரம்பித்து வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து நடுவப் பணியகத்தின் பெயர்ப் பலகையினை இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் எஸ்பஞ்சலிங்கம் திரைநீக்கம் செய்ய, நடுவப்பணியக் கட்டடத்தை கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார்.

இதனைத் தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் செல்வகுமார், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர், தொழிற்சங்கங்களின் பிரமுகர்கள் எனப் பலரும் உரையாற்றினர்.இதில் போராளிகள், பொது மக்கள். பொதுஅமைப்புக்களின் பிரமுகர்கள் என பெருமளவானோர் கலந்துகொண்டனர். (33)

# சம்பூர் காவல் பணிமனையில் மனித உரிமை கலந்துரையாடல்

மனித உரிமை தொடர்பான கலந்துரையாடல் ஒன்றினைச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் நேற்றுமுன்தினம் திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள சம்பூர் காவல் பணிமனையில் நடத்தியுள்ளனர்.இக்கலந்துரையாடலில் திருகோணமலை மாவட்ட ஐ.சி.ஆர்.சி. பிரதிநிதியான பற்றிஸ் வில்டன், பரப்புரை உத்தியோகத்தர் வி.ரி.ஆர். மோகன், திருகோணமலை மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர் க.சிரஞ்சீவி.சம்பூர் காவல்பணி மனைப் பொறுப்பாளர் தேவதாஸ், மற்றும் காவல்துறை உறுப்பினர்கள், போராளிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் மனித உரிமை மீறல் தொடர்பாகவே கலந்துரையாடப்பட்டது.

## மல்லாவி, பூநகரி, ஐயன்குளத்தில்

# வெளிநாட்டு வைத்தியர் நோயாளருக்கு சிகிச்சை

(அலுவலக செய்தியாளர்)

வெளிநாட்டிலிருந்து வருகை தந்த பல் வைத்திய நிபுணராலும், மருத்துவப் போராளிகளாலும் கடந்த 8ஆம் திகதி விசேட மருத்துவ சிகிச்சை மல்லாவி சுற்றயற்கூறு வைத்திசாலையில் 125இற்கு மேற்பட்டோருக்கு பற்சிகிச்சை அளிக்கப்பட்டது. அத்துடன் அனிஞ்சியன்குளம் அ.த.க. பாடசாலையிலும், யோகபுரம் மகா வித்தியாலயத்திலும் பற்சுகாதாரக் கருத்தூட்டல்கள் வழங்கப்பட்டன. மேலும் 13ஆம் திகதி தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவை, பூநகரியில் 107 பேருக்குப் பற்சிகிச்சையும், பூநகரி, நல்லூர் பாடசாலையில் பற்சுகாதாரம் சம்பந்தமான கருத்தூட்டல்களும் வழங்கப்பட்டன. மேலும் 13ஆம் திகதியன்று வெளிநாட்டிலிருந்து வருகை தந்த பொது வைத்திய நிபுணர் அவர்களால் தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவை ஐயன்குளத்தில் 50இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் பார்வையிடப்பட்டனர். அத்தோடு 14ஆம் திகதி 75இற்கும் மேற்பட்டோருக்குப் பற்சிகிச்சை செய்யப்பட்டதோடு தேறாங்கண்டல் ஐயன்குளம் பாடசாலைகளில் பற்சுகாதாரம் சம்பந்தமான கருத்தூட்டல் வகுப்புக்களும் வழங்கப்பட்டன. (தீ)


### நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்

சீர்க்கண்ணன் ஊர்தி சுத்திகரிப்பு நிலைய திறப்பு விழாவில் எமது அழைப்பினை ஏற்றுக் கலந்துகொண்டு சிறப்பித்த அனைவரிற்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, குறிப்பாகப் புலிகளின் குரல் வானொலி ஊடாக எமது அழைப்பினை ஏற்று வருகை தந்த அனைவரிற்கும் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம், விசுவமடு. (4823)

### புது முறிப்பு கற்பக விநாயகர் ஆலயம்

ஆடி அமாவாசை தீர்த்தோற்சவம்

17.07.2004

வழமை போல் தீர்த்தமாடுவதற்கும் பிதிர் கடன் செய்வதற்கும் 17.07.2004 காலை 8.00 மணிக்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

ஆலய பரிபாலன சபை

(சி.9753)

### மு/புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கம் (வ.து) வெதுப்பக உற்பத்தி நிலையம் குத்தகைக்கு விடுதல்

மேற்படி புதுக்குடியிருப்பு ப. நோ. கூ. சங்கத்திற்கு சொந்த மான வெதுப்பக உற்பத்தி நிலையம் குத்தகைக்கு விடப்படவுள்ளது. எனவே இவ் உற்பத்தி நிலையத்தை குத்தகைக்குப் பெற விரும்புவோர் எதிர்வரும் 2004. 07. 31ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை தலைவர், புதுக்குடியிருப்பு ப. நோ. கூ. சங்கம் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பொதுமுகாமையாளர்,
புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கம்.

(சி.9145)

### வரலாறு காணாத மலிவு விற்பனை

கொழும்பு ஜெயா புக் சென்ரரின் அனுசரணையுடன் யாழ்.பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தினால் பல்கலைக்கழகத்தில் இரண்டாவது தடவையாக வரலாறு காணாத மலிவு விற்பனை நடைபெறவுள்ளது.

காலம்: 2004 ஜுலை 19 முதல் 29 வரை
நேரம்: தினமும் காலை 9.00 மணிமுதல் 6.00 மணிவரை (புதிய நேரம்)
இடம்: யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரை மண்டபம்.

- சகலருக்கும் இலங்கை நூல்களிற்குப் 10% கழிவு வழங்கப்படும்.
- பிறநாட்டு வெளியீடுகளுக்கு 15% கழிவு வழங்கப்படும்.
- மொத்தமாக கொள்வனவு செய்யும் அனைவருக்கும் இலங்கை வெளியீடுகள் தவிர பிறநாட்டு வெளியீடுகள் ஒவ்வொன்றிலும் ஆகக்குறைந்தது 10 பிரதிகள் கொள்வனவு செய்வோருக்கு விசேட கழிவாக 20% வழங்கப்படும்.

பாடசாலைகள், பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரிகள், கல்வியற் கல்லூரி, பொது நிறுவனங்கள் பிரதேசசபை, நூலகங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் ஆகிய நிறுவனங்களிற்குக் கடன் அடிப்படையில் புத்தகங்கள் கொள்வனவு செய்வதற்குரிய ஒழுங்குகள் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு
வணிக மாணவர் மன்றம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(சி-10116)

### நேர்முகத் தேர்வு

பாண்டியன் வாணிபத்தால் யூலை 07ஆம், 08ஆம், 09ஆம் திகதிகளில் ஈழநாதத்தில் வெளியான களஞ்சியக்காப்பாளர்/பதிவாளர், விற்பனையாளர்களுக்கான நேர்முகத் தேர்வு 21.07.2004 காலை 10.00 மணிக்கு பாண்டியன் நடுவப் பணிமனையில் நடைபெறும்.

விண்ணப்பங்களை அனுப்பத் தவறியவர்களும் நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ளலாம்.

நேர்முகத்தேர்வு இடம்
நடுவப்பணிமனை,
பாண்டியன் வாணிபம்,
றெட்டபானா *சந்தி,
விசுவமடு.

(சி-4825)

# ஆயுதக்குழுக்கள் தொடர்பான யுத்தநிறுத்த விதிகளை அரசு இதுவரை கடைப்பிடிப்பதாக இல்லை

## மட்டு-அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன்



(கிளிநொச்சி)

**யுத்தநிறுத்த உடன்பாட்டின்படி வடக்கு-கிழக்குப் பகுதியில் ஆயுதக்குழுக்கள் எவையும் ஆயுதங்களுடன் நடமாடமுடியாது. அவர்களை வடக்கு-கிழக்கில் இருந்து வெளியில் அகற்றுதல் வேண்டும் என்பது யுத்தநிறுத்த உடன்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம். ஆனால் சிறிலங்கா அரசு இதனைக் கடைப்பிடிக்க வில்லையென மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஈழநாதத்திற்குத் தெரிவித்தார்.**

**அவர் ஈழநாதத்திற்கு வழங்கிய பேட்டியின் விபரம் வருமாறு:**

** மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களில் ஒரு பதட்டநிலை நிலவி வருவதாக ஊடகங்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களின் உண்மைநிலை என்ன?*

பதட்டநிலை இல்லையென்று கூறமுடியாது. அங்கே இருக்கின்ற பதட்டநிலை என்பது இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தான் இருக்கிறது. இதனையே நாம் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கும்- இராணுவத்தினருடனான சந்திப்புக்களிலும் பலமுறை தெளிவாக வலியுறுத்தி வந்திருக்கிறோம்.

மட்டக்களப்பில் இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் மாத்திரம் நடைபெறுகின்ற இச்சம்பவங்களினால் அந்தப்பகுதியில் இருக்கின்ற மக்கள் மத்தியில் ஒருவித பதட்டம் நிலவுகிறது. இதனை ஒட்டுமொத்தமாக மட்டு-அம்பாறை மாவட்டங்களுடன் சேர்த்துப் பார்க்க முடியாது.

அங்கே . இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் நடைபெறுகின்ற சம்பவங்களின் நோக்கங்களையும், அதனைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளையும் பற்றி ஆராயாமல் அதனைப் பெரும் பூதாகரமான விடயமாக அரச ஊடகங்களும், கருணாவைப் பெரிய மனிதனாக இதுவரையும் சித்திரித்து வந்த ஒருசில சிங்கள-ஆங்கில ஊடகங்களும் கருணாவை நாம் மிகவும் சுலபமான முறையில் வெற்றி கொண்டதன் பின்னர் தமது தோல்வியை மறைப்பதற்காக மட்டக்களப்பு இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நடைபெறுகின்ற சம்பவங்களைப் பெரிதுபடுத்திக் கூறுகின்றன. அவர்கள் கூறுவதுபோல் அங்கு நிலைமை இல்லை.

** இவ்வாறு மக்களை அச்சுறுத்தும் வகையில் போராளிகள் மீதும், ஆதரவாளர்கள் மீதும் நடத்தப்படும் தாக்குதல்கள் மூலம் போராட்டத்தில் இருந்து மக்களை அந்நியப்படுத்த முடியும் என நீங்கள் கருதுகிறீர்களா?*

எமது மக்களைத் தாயக விடுதலைப் போராட்டத்தில் இருந்து அந்நியப்படுத்திவிட எவராலும் முடியாது. ஏனென்றால் எமது மக்கள் தமக்கான சுதந்திரம் வேண்டும், எவரது அடக்குமுறையும் இல்லாது எமது மண்ணில் வாழவேண்டும் என்ற நோக்கில் இந்தப்போராட்டத்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். எனவே இவர்களின் இத்தகைய சம்பவங்களின் மூலம் எமது மக்களின் சுதந்திர வேட்கையை அணைத்துவிட முடியாது. எமது மக்கள் எம்முடனேதான் உறுதியாக நிற்கிறார்கள்.

அண்மைக் காலமாக நடைபெறுகின்ற சம்பவங்கள் எமது ஆதரவாளர்களுக்கான அச்சுறுத்தலாகவே அமைந்திருக்கின்றன. இது மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியிருக்கிறது. எமது போராளிகள் மீது தாக்குதல் நடத்தப்படுகிறது. போராளிகளுக்கே இந்த நிலை என்றால் தமது நிலை என்னவென்ற சிந்தனை மக்கள் மத்தியில் எழலாம். எனினும் எமது மக்கள் இப்போது நிதானமான முறையில் எம்முடன் மிகவும் நெருக்கமாக ஒன்றித்து வருகின்றனர்.

** இலங்கைக்கான நோர்வேத் தூதுவரை அண்மையில் சந்தித்திருந்தீர்கள். அவரிடம் மட்டக்களப்பின் நிலை தொடர்பாக எத்தகைய கருத்துக்களை முன்வைத்தீர்கள்?*

ஆம், கடந்த 13ஆம் திகதி நோர்வேத் தூதுவரிடம் மட்டக்களப்பின் நிலை தொடர்பாக விளக்கியிருந்தோம். அப்போது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தினமும் ஒருமணிநேரம் ரீ.பீ.சி. வானொலி மூலம் மக்களைக் குழப்பக்கூடிய வகையில் மிகைப்படுத்தப்பட்ட பொய்யான வதந்திகளை மக்களுக்குக் கூறிவருகின்றது. இது சமாதானச் சூழலைப் பாதிக்கின்ற ஒருவிடயம் என்பதையும் இதற்கான சரியான தீர்வைத் தரவேண்டும் என்பதையும் நாம் அவரிடம் தெரியப்படுத்தியிருக்கிறோம்.

அது மட்டுமல்லாமல் கருணா குழுவைச்சேர்ந்த சிலர் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஆயுதங்களுடன் நடமாடி வருகின்றனர். நாம் இந்த விடயம் தொடர்பாகவும் தெளிவாகக் கூறியிருக்கின்றோம். இதனைப் படைத்தரப்புத்தான் கட்டுப்படுத்த வேண்டும். தவறும் பட்சத்தில் படையினரின் கட்டுப்பாட்டுப்பிரதேசங்களில் நாமும் ஆயுதங்களுடன் சென்று அவர்களைத் தாக்கி அழிக்க வேண்டும் என்ற ஒரு செயற்பாடு இருக்கிறது எனவே படைமுகாம்களுக்குள்ளோ அல்லது அதனை அண்டிய பகுதிகளின் உள்ளோ இவர்கள் இருந்தால் நாம் அங்குசென்று அவர்களைத் தாக்கி அழிக்க வேண்டிய கட்டாயம் எமக்கு இருக்கிறது. இதற்கான பொறுப்பை படையினரே ஏற்கவேண்டும் என்பதையும் நாம் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறோம்.

** இவ்வாறு படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் நீங்கள் ஆயுதங்களுடன் சென்று வருவது யுத்தநிறுத்த உடன்படிக்கையை மீறுகின்ற ஒரு செயலாக அமையாதா?*

யுத்தநிறுத்த உடன்படிக்கையில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. வட-கிழக்குப்பகுதிகளில் ஆயுதக் குழுக்கள் எவையும் ஆயுதங்களுடன் நடமாடமுடியாது. அவை வட-கிழக்குக்கு வெளியில் கொண்டுசெல்ல வேண்டும் என்பது யுத்தநிறுத்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம். இதனை இன்றுவரை சிறிலங்கா அரசாங்கம் கடைப்பிடிக்கவில்லை. வட-கிழக்கில் இத்தகைய சம்பவங்கள் நடைபெறக்கூடாது என்றால் அங்கே இருக்கின்ற ஆயுதக்குழுக்கள் எல்லாமே வெளியேற்றப்படவேண்டும். படைத்தரப்பின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சென்று நிராயுதபாணிகளாக அரசியல் பணியில் ஈடுபட்டிருக்கின்ற எமது போராளிகளைத் தாக்குவதற்காக பதுங்கியிருக்கின்றவர்களைக் குறிப்பாகச் சென்று தாக்குவதற்காகவே நாம் ஆயுதங்களுடன் செல்ல வேண்டிய நிலைவரும் என்பதையே எடுத்துக்காட்டுகிறோம்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையை எமது தலைமைப்பீடம் கட்டுக்கோப்புடனேயே பேணிப் பாதுகாத்து வருகிறது. இன்று இந்த உடனபடிக்கைக்கு முற்றிலும் மாறாக எமது போராளிகள் பலரை நாம் இழந்திருக்கிறோம். எனினும் யுத்தநிறுத்தத்தைப் பேணவேண்டும். அதற்கு மதிப்பளிக்க வேண்டும். அதனூடாக எமது மக்களுக்கு சரியான தீர்வை வழங்கவேண்டும் என்ற சரியான சிந்தையுடன் மாற்றுக்கருத்துக்கிடமின்றி நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.

எனவே நாம் இவர்களிடம் வலியுறுத்துவது என்ன வென்றால் மாற்றுக்குழுக்களின் அந்த செயற்பாட்டை அரச தரப்புத்தான் கட்டுப்படுத்த வேண்டும். அதனை அரச தரப்பு மேற்கொள்ளாத பட்சத்தில் தான் நாம் அதனை நிறுத்துவதற்கான செயற்பாட்டில் இறங்க வேண்டும். அதற்காகத்தான் நாம் படைக்கட்டுப்பாட்டுப்பகுதிகளுக்குள் ஆயுதங்களுடன் செல்ல வேண்டும் என்பதாகும்.

** மட்டக்களப்பு -அம்பாறை மாவட்டங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்த நிர்வாகக் கட்டமைப்புக்களில் சில தடங்கல்கள் ஏற்பட்டிருந்தன. அவை இப்போது பூரணப்படுத்தப்பட்டு விட்டனவா?*

ஆம்! எமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்த நிர்வாகக் கட்டமைப்பில் ஒரு குறிப்பிட்ட காலம் தடங்கல் ஏற்பட்டிருந்தது. ஆனால் அவை அனைத்துமே இப்போது சீர்செய்யப்பட்டு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தமிழீழ காவல்துறையின் செயற்பாடுகள் ஆரம்பமாகி நல்ல முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. நீதி, நிர்வாகம் அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது. எமது கட்டுப்பாட்டுப் பிரதேங்களில் நடைபெற்று வந்த நிர்வாக வேலைகள் அனைத்தும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

** இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் அரசியல் வேலைத் திட்டங்களை மேற்கொள்ளும் செயற்பாடு இப்போது எந்த நிலையில் இருக்கிறது?*

இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் அரசியல் வேலை செய்கின்ற எமது போராளிகள் மீது நடைபெற்ற தாக்குதல்களின் பின்னர் எமது வேலைகளை மிகவும் கவனமாக மேற்கொண்டு வருகிறோம். ஆனால் எமது அரசியல் நடவடிக்கைகளை நிறுத்தவில்லை. இந்த நிலை தொடர்பாக நோர்வேத் தூதுவரிடமும் எமது நிலைப்பாட்டை தெரிவித்திருக்கிறோம்.

** மட்டு – அம்பாறையில் அமைதி தோன்றியிருக்கிறது. எனவே புலிகள் படைத்தரப்புடன் சந்திப்புக்களை ஆரம்பிக்க வேண்டுமென இராணுவத் தளபதி கூறியிருக்கிறார். இது பற்றி உங்களது கருத்தென்ன?*

மட்டு - அம்பாறை மாவட்டங்களில் தான் படையினரையும், விசேட அதிரடிப் படையினரையும், பொலிசாரையும் சந்தித்து வந்தோம். இந்த சந்திப்புக்கள் அனைத்தையும் நாம் நம்பிக்கையோடுதான் மேற்கொண்டு வந்தோம். அந்த சந்திப்புக்கள் மூலம் நாம் எவ்விதமான பலனையும் அடையவில்லை. எனவேதான் ஒன்றை வலியுறுத்திக் கூறினோம். இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் யுத்த நிறுத்தத்தை மீறுகின்ற இத்தகைய செயற்பாடுகள் நடைபெறாமல் இருந்தால் நாம் சந்திப்புக்களை மேற்கொள்ளலாம். இல்லாவிட்டால் அதில் எவ்வித பலனும் இருக்கப் போவதில்லை. அதனால் தான் நாம் சந்திப்புக்களை இடை நிறுத்தினோம். என்பதை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் நாம் தெளிவாக தெரியப்படுத்தியிருக்கிறோம்.

# பா.உறுப்பினர்கள் புலிகளுக்கு இணையாகவன்றி துணையாகவே செயற்பட முடியும்

## -பா.உறுப்பினர் ஈழவேந்தன்-

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடிவருகின்ற தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு இணையாகப் பாராளுமன்ற உறுப்பினர்களால் செயற்படமுடியாது. ஆனால் அவர்களுக்குத் துணையாகச் செயற்படமுடியும் என்கிறார் தமிழ்க்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தன்.

நேற்று முன்தினம் யாழ். மாவட்டப் பொது அமைப்புக்களின் ஒன்றியத் திறப்புவிழா கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றது. அதில் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்தியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் இஸ்லாமிய மக்கள் எத்தனை முரண்பாட்டை எம்மோடு ஏற்படுத்தினாலும் அதை நாங்கள் மறப்போம். நாங்கள் ஒரு மொழி பேசுபவர்கள். ஒற்றுமையாகவாழவேண்டும். நாம் எல்லோரும் ஒற்றுமையாக இருந்தால் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு 50 இற்கு மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களால் குரல் எழுப்ப முடியும். எங்களை யாரும் எதையும் செய்யமுடியாது. சந்திரிகா அம்மையார் போருக்கு ஆயத்தப்படுத்திக்கொண்டு சமாதானம் பற்றி பேசுகிறார் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்திய தமிழ்க்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசன் கருத்துத் தெரிவிக்கையில் தமிழ்மக்களின் பாதுகாப்பு அரண்களாகச் செயற்படும் தமிழீழ விடுதலைப் புலிகளை ஏகபிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டது இன்று உலகமே அறிந்த உண்மை என்றார். (36)

# கோணாவில் சந்திப் பகுதியில் புதிய சந்தை அமைப்பு

கரைச்சிப் பிரதேசசபையினால் கோணாவில் கிராம மக்களின் நன்மை கருதி புதிய சந்தையொன்று அமைக்கப்பட்டு வருகின்றது.20x15 அளவில் கோணாவில் சந்தியை அண்டியபகுதியில் இச்சந்தை அமைக்கப்பட்டு வருகின்றது.சந்தையொன்று இல்லாமையால் குறித்த கிராம மக்கள் பெரும் இடர்பாடுகளை எதிர்நோக்கி வருகின்றனர்.இக் குறைபாடானது அமைக்கப்பட்டுவரும் புதிய சந்தையினால் நிவர்த்தி செய்யப்படுமென எதிர்பாக்கப்படுகின்றது. (கா)

# புலிகள் இயக்கத்தில் இணைந்த சிறுவன் பெற்றோரிடம் ஒப்படைப்பு

சுயவிருப்பின் பேரில் தன்னைத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைத்துக் கொண்ட சிறுவன் ஒருவன் நேற்று முன்தினம் அவனது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளான்.

வடமராட்சி கோட்ட அரசியல் துறை செயலகத்தில் இடம்பெற்ற இக்கையளிப்பு நிகழ்வில் வடமராட்சிக்கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தயாவாணனால் சிறுவன் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளான்.

இந்நிகழ்வில் பிரஸ்தாப சிறுவனின் பாடசாலை அதிபர் மற்றும் சிறுவர் நலன் பேணும் அமைப்புக்களின் பிரமுகர்களும் கலந்துகொண்டனர். (33)

# சாள்ஸ் அன்ரனி படையணியின் மாபெரும் விளையாட்டுப் போட்டி

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முதல் தாக்குதல் தளபதியும் மூத்த தளபதியுமான மாவீரர் லூக்காஸ் சாள்ஸ் அன்ரனியின் 21ஆவது ஆண்டு நினைவைச் சிறப்பிக்கும் வகையில் சாள்ஸ் அன்ரனி படையணியின் போர் வீரர்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் நேற்று நடைபெற்றன.

சிறப்புற நடைபெற்ற இறுதி நாள் நிகழ்வில் பொதுச் சுடரினை மாலதி படையணியின் சிறப்புத் தளபதி கேணல் விதுஷா ஏற்றி வைத்தார். தேசியக்கொடியினை தென் போர்முனை கட்டளைத் தளபதி கேணல் ஜெயம் ஏற்றி வைத்தார். சாள்ஸ் அன்ரனி படையணிக் கொடியினை சாள்ஸ் அன்ரனி சிறப்புத் தளபதி லெப். கேணல் நகுலன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து இறுதி நாள் போட்டிகள் ஆரம்பமாகின. இதில் சிறப்புப் போட்டியாக கால்பந்தாட்ட இறுதிப்போட்டி நடைபெற்றது. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப் போட்டியில் லெப். சோழ முதல்வன் இல்ல அணியை எதிர்த்து ஆடிய லெப். தீபன் இல்லம் 2-1 என்ற கோல் எண்ணிக்கையில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து மைதான நிகழ்வுகளாக முட்டி உடைத்தல், வழுக்கு மரம் ஏறல், தலையணைச் சமர், கயிறு இழுத்தல் போன்ற போட்டிகள் நடைபெற்றன.

சிறப்பு நிகழ்வாக சாள்ஸ் அன்ரனி படையணியின் வெற்றிச் சமர்களில் ஒன்றான இத்தாவில் தாக்குதல் சம்பவத்தைச் சித்திரிக்கும் வகையிலான மாதிரி நடவடிக்கை வீரர்களால் செய்து காட்டப்பட்டது. ஐந்து நாட்கள் நடைபெற்ற மேற்படி போட்டியில் தீபன் இல்லம் முதல் இடத்தையும், சோழமுதல்வன் இல்லம் இரண்டாம் இடத்தையும். கஜன் இல்லம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

இரவு நிகழ்வாக இசைக்கச்சேரி மற்றும் கலை நிகழ்வுகளும் வெற்றி பெற்ற போர்வீரர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் நடைபெற்றன. இந்நிகழ்வில் விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகள், தளபதிகள், பொறுப்பாளர்கள் போராளிகள் எனப் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# சனாதிபதி செயலகத்தின் கருத்து சனாதிபதியின் கருத்தல்ல

## -மங்கள சமரவீர

மாகாணசபைத் தேர்தலின் மூலம் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு கிடைத்த வெற்றி சமாதான முயற்சிக்கு கிடைத்த வெற்றியே தவிர, வடக்கு கிழக்கில் இடைக்கால நிர்வாக சபையை அமைப்பதற்கு பொது மக்களினால் வழங்கப்பட்ட ஆதரவு அல்ல என அரசாங்கத்தின் பேச்சாளர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர்களை வெற்றியடையச் செய்ததன் மூலம், நாட்டு மக்கள் சனாதிபதி சந்திரிகாவிற்கு சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கும், இடைக்கால நிர்வாக சபையை அமைப்பது குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கும் ஆதரவு வழங்கியுள்ளதாக சனாதிபதியின் செயலாளர் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும் அக்கருத்தை மறுத்த அரசாங்கத்தின் பேச்சாளர் மங்கள சமரவீர, அக்கருத்து சனாதிபதியின் செயலகத்தினால் வெளியிடப்பட்டபோதிலும் அது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் கருத்தல்ல எனக் கூறியுள்ளார்.

# இருண்ட எதிர்காலத்தை நோக்கி நாடு போய்க்கொண்டிருக்கிறது

## எச்சரிக்கிறார் அமைச்சர் பீரிஸ்

(கொழும்பு)

சமாதான பேச்சுவார்த்தைகள் சம்பந்தமாக அரசாங்கம் இதுவரை சரியானதொரு தீர்மானம் எடுக்க முடியாமல் திண்டாடுகின்ற படியால் இந்த நாடு இருண்டதொரு எதிர்காலததை நோக்கி போய்க் கொண்டிருக்கிறது என முன்னாள் அமைச்சர் பீரிஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இப்பொழுது நடந்த மாகாண சபைத் தேர்தலில் நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மக்கள் வாக்களித்துள்ளதாக சனாதிபதி இப்பொழுது அறிக்கை வெளியிட்டுள்ளார். சனாதிபதி சமாதானப் பேச்சுவார்த்தைகள் சம்பந்தமாக அறிக்கை விடும் பொழுது அதற்கு எதிராக ஜே.வி.பி யினர் அறிக்கை வெளியிடுகின்றனர். இதனால் தீர்மானம் எடுக்க முடியாத நிலைப்பாட்டிற்குத் தள்ளப்பட்டுள்ளார். இம்மாதம் 12ஆம் திகதி சனாதிபதி வெளியிட்ட அறிக் கைக்கு எதிராக இம்முறை மாகாண சபைத் தேர்தலில் விடுதலைப்புலிகளின் சமஷ்டி ஆட்சி முறைக்கு எதிராக வாக்களித்துள்ள படியால் இதை நாங்கள் வன்மையாக எதிர்ப்போம் என ஜே.வி.பி பிரசார செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நாட்டை மீண்டும் யுத்தம் ஒன்றுக்கு இட்டுச் செல்லாமல் சமாதான முனைப்பை உரிய வகையில் முன்னெடுக்க வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்திடம் கோரியுள்ளது. இலங்கை மக்களின் எதிர்காலம் கருதிச் சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதே ஐக்கிய தேசிய கட்சியின் கருத்தாக அமைந்துள்ளது.

சமாதானப் பேச்சுக்கான கட்சிக் கொள்கைகளே நாட்டின் எதிர் காலத்தைத் தீர்மானிக்கும் கருவியாக காணப்படுகின்றன.

இந்த நிலையில் அரசாங்கம் தன்னாட்சி அதிகாரம் தொடர்பில் பேச்சு நடத்த முன்வருவதாகக் கூறுகின்ற அதே நேரம் மக்கள் விடுதலை முன்னணி அதற்கு எதிராக சுவரொட்டிகளை ஒட்டுகிறது. மறுபுறத்தில் சனாதிபதி செயலகம் வெளியிட்ட செய்தி குறிப்புக்கும், சனாதிபதிக்கும் தொடாபில்லையென ஊடக அமைச்சர் தெரிவித்துள்ளமை அரசாங்கத்தின் முரண்பட்ட கொள்கைளை வெளிப்படுத்துவதாக அமைவதாகவும் ஐக்கிய தேசியக் கட்சி கூறியுள்ளது.

# வடமராட்சி வடக்குக் கடலில் மீண்டும் இந்.இழுவைப் படகுகள்

## ஆயிரக் கணக்கில் அத்துமீறிப் பிரவேசம்

வடமராட்சி வடக்குக் கடற்பரப்பில் மீண்டும் இந்திய மீன்பிடி இழுவைப்படகுகளினது அத்துமீறல்கள் இடம் பெற்று வருவதாக வடமராட்சி வடக்கு மீனவ சங்கங்களின் சமாசம் குற்றம் சாட்டியுள்ளது. ஆயிரத்துக்கும் அதிகமான இழுவைப் படகுகள் இவ்வாறு அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டிருப்பதாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறிப பிரவேசித்த இப்படகுகள் வடமராட்சி வடக்கு கரையோரத்திலிருந்து சுமார் 12 கிலோமீற்றருக்கும் குறைவான தூரப் பகுதியில் தரித்து நின்று மீன்பிடியில் ஈடுபட்டுள்ளன.

இதேவேளை அத்துமீறிப் பிரவேசிக்கும் படகுகளை கட்டுப்படுத்துவதில் இலங்கைக் கடற்படையினரோ, கரையோர காவல் பணியில் ஈடுபட்டுள்ள படையினரோ எந்தவொரு நடவடிக்கையினையும் எடுத்திருக்கவில்லையென சமாச வட்டாரங்கள் குற்றம் சாட்டுகின்றன.

குறிப்பாக அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற இலங்கை - இந்திய மீனவர் சங்கங்களுக்கிடையேயான பேச்சுக்களில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு மாறாக இந்திய மீன்பிடி படகுகள் மீண்டும் அத்துமீறி பிரவேசித்துள்ளமையினையும் அவ் வட்டாரங்கள் குறித்துக் காட்டுகின்றன. இதனிடையே அண்மையில் மன்னார் கடற்பரப்பினுள் அத்து மீறிப் பிரவேசித்த இந்திய மீன் பிடிப் படகுகள் தீக்கிரையாக்கப்பட்டதை அடுத்தே அப்படகுகள் வடமராட்சி மற்றும் நெடுந்தீவுக் கடற்பரப்பை நோக்கி வருவதாகக் கூறப்படுகிறது. (27)

# வேலையற்ற பட்டதாரிகளுக்கு வரும் முதலாம் திகதி முதல் நியமனம்

## -பிரதி நிதியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

வேலையற்ற பட்டதாரிகளுக்கு எதிர்வரும் முதலாம் திகதியிலிருந்து வேலை வாய்ப்பு வழங்கப்படுமென பிரதி நிதியமைச்சர் ரஞ்சித்சியம்பலமபிட்டிய தெரிவித்துள்ளார்.அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

சுமார் பத்தாயிரம் விண்ணப்பங்கள் தற்போது கொழும்பு பல்கலைக்கழக கணினிப்பிரிவிற்கு அனுப்பப ்பட்டுள்ளன. ஏனைய விண்ணப்பங்கள் மிக விரைவாக தரம்பிரிக்கப்படுமெனத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குகின்ற வேளை தகுதிகள் மட்டும் கவனத்தில் கொள்ளப்படும். அரசியல் தலைவர்களுக்கு நியமனங்களை வழங்குவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்துகிறது. முகாமைத்துவ சேவைத் திணைக்களம் விண்ணப்பங்களை வகைப்படுத்தியுள்ளது. இந் நடவடிக்கைகளை துரிதப்படுத்தும் நோக்கில் மேலும் 100 ஊழியர்களை சேவையில் ஈடுபடுத்தியுள்ளதென தெரிவித்தார். தற்போது 50,000 இற்கும் அதிகமான விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதெனவும். சத்தியக் கடதாசி மூலம் வேலைவாய்ப்பில்லாதவர் என உறுதிப்படுத்தப்பட்டவர்களின் விண்ணப்பங்கள் மட்டும் வகைப் படுத்தப்படுகின்றதெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# திருமலையில் குண்டுவெடிப்பு

நேற்று வியாழன் அதிகாலை 1.20 மணியளவில் திருகோணமலை- உப்புவெளிப் பிரதேசத்தில் சிறிமாபுர என்னுமிடத்துக்கு அருகில் குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம் பெற்றதாக திருமலை குற்றத்தடுப்புப்பிரிவுப் பொறுப்பதிகாரி அமிலா சமரக்கூன் தெரிவித்தார். ட்ரான்ஸ்போமர் ஒன்றின் அருகில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் வீடு ஒன்றின் கூரையும் வாகனம் ஒன்றுமே சேதமடைந்ததாக பொறுப்பதிகாரி சமரக்கூன் தெரிவித்தார். இச்சம்பவம் தொடர்பாகப் பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர். (25)

## திறப்புவிழா

(உடையார்கட்டு)

உடையார்கட்டு-சுதந்திரபுரம் மத்தி ஆரம்ப சுகாதார நிலையத் திறப்பு விழா இன்று மு.ப.10.00 மணிக்கு நடைபெறவுள்ளது. நிகழ்விற்குப் பிரதம விருந்தினராகப் பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஜெயக்குலராஜாவும், சிறப்பு விருந்தினராகப் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் தயானந்தாவும் கலந்து கொள்ளவுள்ளனர். இவ்விழாவினைத் தேசிய எழுச்சிப்பேரவையினரும், கிராம மக்களும் இணைந்து ஒழுங்கு படுத்தியுள்ளனர். (15)

## மட்டு.சிறைச்...

இச் சம்பவம் ஒரு மாறுபட்டதல்ல. இது போன்ற சம்பவங்களை நாம் எதிர் பார்ப்பது வழமை என்றார்.

## யாழ்...

கோரும் மனுவொன்றை சட்டத்தரணி ஈ.ஏகநாதன் தாக்கல் செய்திருந்தபோதும் பொலிசார் அதற்கு ஆட்சேபனை தெரிவித்திருந்தனர்.

இதனையடுத்து அவர்களை எதிர்வரும் 19ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க யாழ். நீதவான் உத்தரவிட்டுள்ளார். எனினும் கடலில் வெடிக்க வைத்து மீன்பிடிப்பதற்காக மன்னார் பகுதி மீனவரிடம் இருந்து இவ் வெடி பொருட்களைத் தாம் பெற்றிருந்ததாக மீனவர் கூறுகின்றனர். (27)

## துப்பாக்கிச்....

சரணடைந்தார்.

இவரைக்கைது செய்த பின்னர் பொலிசார் சிறைச்சாலைக் குள்ளிருந்து சிறியரக கைத் துப்பாக்கி ஒன்று கைக்குண்டுகள் இரண்டு கையடக்கத்தொலைபேசிகள் ஆகியவற்றைக் கைப்பற்றியுள்ளனர். சந்தேக நபரின் தலையணைக்குள்ளிருந்து சுடப்பட்டவர்களை துரோகிகளாக விமர்சித்து எழுதப்பட்ட ஆவணங்கள் இரண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

## மாநாடு...

இதனை ஒழுங்கு செய்துள்ளன. சர்வதேச கடல் பாதுகாப்பு சம்மேளனத்தின் அறிவுரையின் படி கடந்த ஜூலை முதலாம் திகதி முதல் உலக நாடுகளின் துறைமுகங்கள் யாவும் கடற்படையினரின் முழுமையான பாதுகாப்பிற்குள் வந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (32)

## யாழ் சிறை...

சிறைக்காவலர் சிறைச்சாலை அத்தியட்சகர் அதிகார துஷ்பிரயோகம் செய்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளார். (33)

## மட்டு...

போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்

இதேவேளை மட்டக்களப்பு நீதிமன்ற நீதிபதி அஸ்மீர் நேற்று மாலை சிறைச்சாலைக்கு சென்று சம்பவம் நடந்த இடத்தை பார்வையிட்டு மரண விசாரணையை மேற்கொண்டார். கடமையிலிருந்த சிறைச்சாலை உத்தியோகத்தர் ஒருவர் மற்றும் சக கைதிகள் மூன்று பேரின் வாக்குமூலங்களைப் பதிவு செய்த பின்னர் இவர் “இம் மரணங்கள் ஆட்கொலைகள்” எனத் தீர்ப்பளித்துள்ளார்.

## சுருட்டிய...

முகாமைத்துவப் பணிப்பாளராக கருணாவின் மனைவியின் தந்தையார் கல்லடியைச் சேர்ந்த கந்தையா சந்திரசேகரன் பெயரிலும் பதிவு செய்யப் பட்டுள்ளது.

மகாஜல ஏற்றுமதி இறக்குமதி நிறுவனத்தின் பதிவுச் சான்றிதழ் இலக்கம் பி.வி.எஸ்.(P.V.S.) 36846 ஆகும். இது நிறுவனங்கள் பதிவாளர் நாயகம் அவர்களால் இந் நிறுவனத்திற்கான உடன்படிக்கை ஆவணங்கள், உப விதிகள் என்பன சட்டத்தரணியும் சத்திய ஆணையாளருமான எஸ். துரைராசா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இந் நிறுவனத்திற்கு வெள்ளவத்தையிலுள்ள தனியார் வங்கி ஒன்றில் 25 மில்லியன் ரூபா திருமதி கருணாவின் பெயரில் வைப்பிலிடப்பட்டு இதனை ஆதாரமாகக் காட்டி நிறுவனத்தைப் பதிவு செய்துள்ளதாகவும் டெய்லிமிரர் செய்திக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதேவேளை மேலும் இரு நிறுவனங்கள் கருணாவின் பெயரில் பதியப்பட்டுள்ளதான விடயமும் அம்பலத்துக்கு வந்துள்ளது. மேற்படி இரு நிறுவனங்களுக்கும் கருணாவின் நெருங்கிய சகாவாகவிருந்து செயற்பட்டு வரும் குகனேசன் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இவற்றிற்கான பெருந்தொகைப் பணம் கருணாவின் சகாவான குகனேசன் என்பவரால் உள்ளூர் நிறுவனங்கள், வர்த்தகர்கள், விவசாயிகள் மற்றும் தனவந்தர்களிடமிருந்து எந்தவித ஆவணங்களுமின்றிக் கப்பமாகப் பெறப்பட்டதாக அறியவருகிறது.

## சமாதான...

சகல எதிர்க்கட்சியினரின் அபிப்பிராயங்களைப் பெற்றுக் கொள்ளப்போவதாக சனாதிபதி அவர்கள் இம்மாதம் 13 ஆம் திகதி நடந்த கட்சியின் விசேட கூட்டத்தில் தெரிவித்திருந்தது தெரிந்ததே.

இது சம்பந்தமாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவோடு முதலாவது கட்டப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்த பின் ஏனைய கட்சித்தலைவர்களோடு கலந்துரையாட உள்ளதாகவும் விடுதலைப்புலிகளால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை ஆட்சிமுறை சம்பந்தமாக ஏனைய கட்சியினரின் அபிப்பிராயங்களைப் பெற்று இறுதிப் பேச்சுவார்த்தை நடத்தப்போவதாகவும் சனாதிபதி கூறியிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு யூலை மாதம் 16ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.